# ஒரு கோடி பாடல்கள்

ஒரு கோடிப் பாடல்கள் நான் பாடுவேன்
அதைப் பாமாலையாக நான் சூடுவேன்
உலகெல்லாம் நற்செய்தி நானாகுவேன்
உந்தன் புகழ்பாடிப் புகழ்பாடி நான் வாழுவேன்

**1**
மன்வீணைதனை இன்று நீ மீட்டினாய் - அதில்
மலர்ப் பாக்கள் பலகோடி உருவாக்கினாய்
என் வாழ்வும் ஒரு பாடல் இசைவேந்தனே - அதில்
எழும் ராகம் எல்லாமுன் புகழ் பாடுதே
ஆதியும் நீயே அந்தமும் நீயே
பாடுகின்றேன் உனை யேசுவே
அன்னையும் நீயே தந்தையும்  நீயே
போற்றுகின்றேன் உனை யேசுவே

**2**
இளங்காலைப் பொழுதுந்தன் புகழ்பாடுதே - அங்கு
விரிகின்ற மலருந்தன் புகழ்பாடுதே
அலை ஓயா கடலுந்தன் கருணை மனம் - வந்து
கரைசேரும் நுரையாவும் கவிதைச் சரம்
ஆதியும் நீயே அந்தமும் நீயே
பாடுகின்றேன் உனை யேசுவே
அன்னையும் நீயே தந்தையும்  நீயே
போற்றுகின்றேன் உனை யேசுவே